SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

வர்த்தக அமைச்சு

## தேசிய வரவு செலவு திட்டங்களை செயல்படுத்துதல் 2021

# வெளிநாட்டு சந்தைகளில் உள்நாட்டு வர்த்தகக் குறிகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கு இலங்கை தொழில்முயற்சியாளர்களுக்கு உதவும் தேசிய ஏற்றுமதி வர்த்தகக் குறிகள் மேம்பாட்டு திட்டம் 2021 – 2024

“சுபீட்சத்தின் நோக்கு” அரசின் தேசிய கொள்கைக்கு அமைய, நாட்டின் பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு முக்கிய அபிவிருத்தி மூலோபாயமாக உலகளாவிய புத்தாக்க மையம் ஒன்றாக இலங்கையை நிறுவுவது மற்றும் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்துவது அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதாரத்தை நிலைபெறச் செய்வதற்கு குறிப்பாக தற்போதைய கொவிட்-19 வைரஸ் தொற்று சூழலில் வலுவான ஏற்றுமதித் துறை ஒன்றை மேம்படுத்துவது நாட்டிற்கு அவசியமாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட பின்னணியில், வெளிநாட்டு சந்தைகளில் உள்நாட்டு வர்த்தகக் குறிகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கு இலங்கை தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு National Export Brands Development Programme என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த திட்டமானது சர்வதேச சந்தைக்காக ஆக்கபூர்வ, புத்தாக்க மற்றும் உயர் பெறுமதி சேர் உற்பத்திகளை மேம்படுத்தல் மற்றும் முன்னோக்கி இட்டுச்செல்வதற்கு இலங்கை தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கிறது. இந்தத் திட்டம் 100% இலங்கைக்கு சொந்தமான வர்த்தகக் குறிகளுக்கு மாத்திரமே பொருந்தும்.

### யாருக்காக, என்ன வழங்கப்படுகிறது

**பிரிவு I – நிறுவப்பட்ட ஏற்றுமதி நிறுவனங்கள்:**
நிறுவப்பட்ட விநியோகச் சங்கிலி மற்றும் போதுமான உட்கட்டமைப்புடன் சர்வதேச சந்தையில் நிறுவப்பட்ட வர்த்தகக் குறி மற்றும் முந்தைய வர்த்தக அனுபவம் பெற்ற ஏற்றுமதியாளர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுவர். அந்த நிறுவனம் 3 ஆண்டுகளுக்கு மேல் ஏற்றுமதி அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

03 ஆண்டுகளுக்காக அதிகபட்சம் ஆண்டுக்கு 10.0 மில்லியன் ரூபா வரை மீளளிக்கப்படுதல் அடிப்படையில் 50% இனை உதவித்தொகை வழங்கல் தொடர்பில் கருத்தில்கொள்ளப்படும்.

**பிரிவு II – ஏற்றுமதிக்கு தயாராகும் நிறுவனங்கள்:**
ஏற்றுமதி சந்தைக்கு நுழைவதற்கான ஈடுபாட்டுடனான வலுவான உள்நாட்டு வர்த்தகக் குறியை கொண்ட, நிலையான உள்நாட்டு விநியோகச் சங்கிலி, போதுமான வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பை பெற்ற நிறுவனங்கள் விண்ணப்பிக்க தகுதி பெறும்.

03 ஆண்டுகளுக்காக அதிகபட்சம் ஆண்டுக்கு 5.0 மில்லியன் ரூபா வரை மீளளிக்கப்படுதல் அடிப்படையில் 50% இனை உதவித்தொகை வழங்கல் தொடர்பில் கருத்தில்கொள்ளப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு திட்ட வழிகாட்டல்களை பார்க்கவும்**

### எவ்வாறு விண்ணப்பிப்பது

“அறிவிப்புகளின்” கீழ் www.srilankabusiness.com என்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை இணையதளத்தில் இருந்து திட்ட வழிகாட்டல்களுடன் சேர்த்து விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்ய முடியும்.

திட்ட வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2021 ஓகஸ்ட் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் - சந்தை மேம்பாடு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அனைத்து தொடர்புடைய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் ஸ்கேன் பிரதிகளை pras@edb.gov.lk மற்றும் dinushika@edb.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு, திரு. பிரசன்ன ஜயசிங்க, பிரதிப் பணிப்பாளர்/சந்தை மேம்பாடு, தொ: 011 2300722, கைபேசி: 071 6850217, மின்னஞ்சல்: pras@edb.gov.lk மற்றும் தினூசிகா அபேகுணவர்தன, உதவிப் பணிப்பாளர்/சந்தை மேம்பாடு, கைபேசி: 0776 190050, மின்னஞ்சல்: dinushika@edb.gov.lk. ஆகியோரை தொடர்புகொள்ளவும்.

**தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**
**தொ.: 2300700, தொலைநகல்: 2300715**
**இணையதளம்: www.srilankabusiness.com**